அக்டோபர்: 25

## ஸ்வர்ணரோலா

ஸ்வர்ணரோலா இவர் இத்தாலியை சார்ந்தவர். இவருடைய குடும்பம் விக்கிரக வழிபாடு செய்கிற குடும்பம். அவர் சிறுவயது முதலே பக்தியும், புத்திக்கூர்மையும், அமைதியும் உடையவராக இருந்தார். தத்துவ ஞானத்திலும் மற்றும் பல கலைகளிலும் தேறியவராகவும், அரிஸ்டாட்டில் என்னும் ஞானியின் புத்தகங்களை கற்றவராகவும் இருந்தார். இருந்த போதிலும், நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வந்தார் ஸ்வர்ணரோலா.

தாமஸ் அக்குயினாஸ் என்ற கிறிஸ்தவ புத்தகத்தை வாசித்தார் ஸ்வர்ணரோலா. அதன் மூலம் அவர் இயேசு கிறிஸ்து தான் உண்மையான தேவன் என்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். தேவனுடைய ஊழியத்தை செய்ய தேவனுடைய அழைப்பை பெற்றார். அவரது பிரசங்கம் வல்லமையாக இருந்தது.

அவரது பிரசங்கத்தை கேட்ட மக்கள் கண்ணீருடன் தங்கள் வாழ்க்கையை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். பாவத்தை குறித்ததான அவருடைய பிரசங்கம் மக்களின் இதயங்களை உடைத்தது. அவரது பிரசங்கத்தை கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தார்கள். கலைஞர்கள், ஞானிகள், அரசாங்க அதிகாரிகள் போன்றோர் அவரது பிரசங்கத்தை கேட்க வந்தார்கள்.

ஸ்வர்ணரோலாவின் ஊழியத்தை தேவன் அதிகமதிகமாக ஆசீர்வதித்தார். ஏராளமான மக்கள் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். மக்கள் தேவனை ஒழுங்காக ஆராதித்தார்கள். ஏழைகள் ஆதரிக்கப்பட்டார்கள். வியாபாரிகள் அநியாயமான வியாபாரம் செய்வதை நிறுத்தினார்கள். நாடகங்கள் நிறுத்தப்பட்டன. ஆபாச நூல்கள் எரிக்கப்பட்டன. இப்படியாக தேவன் அவர் மூலமாக பெரிய காரியங்களை செய்தார்.

ஆனால், ரோமில் இருந்த போப்பும், உதவி குருக்களும் ஸ்வர்ணரோலா மீது அதிக கோபம் கொண்டார்கள். எனவே, அவரை துன்புறுத்தி, சபைக்கு வெளியே விரட்டினார்கள். 1498ல் அலெக்ஸாண்டர் என்ற போப்பின் கட்டளையின்படி ஸ்வர்ணரோலா அக்கினிக்கு இரையாக்கப்பட்டார்.

கடைசிவரை ஆண்டவருக்கு உண்மையாக இருந்து இயேசு கிறிஸ்துவுக்காக தன் ஜீவனை விட்டார். அவர் மரிக்கும்போது சொன்ன வார்த்தை "இயேசு கிறிஸ்து எனக்காக மிகவும் பாடுபட்டார்". அவருக்காக நான் பாடுபட என்னை ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி தன் வாழ்க்கையை முடித்தார்.

### கேள்விகள்:

1. ஸ்வர்ணரோலா எதுவெல்லாம் இருந்தும் நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வந்தார்?
2. ஸ்வர்ணரோலாவின் பிரசங்கம் என்ன செய்தது?
3. ஸ்வர்ணரோலா என்ன சொல்லி தன் வாழ்க்கையை முடித்தார்?